செ.வெ.எண்: 48 நாள்: 23.01.2017

நக.அ3/ 231 /2017
நாள் – 21 .01.2017

மாவட்ட ஆட்சியரகம் (ஊராட்சிகள்)
கரூர் மாவட்டம்.

<u>பத்திரிக்கை செய்தி</u>

கரூர் மாவட்டத்தில் உள்ள எட்டு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 157 கிராம ஊராட்சிகள், இரண்டு நகராட்சிகள் மற்றும் 11 பேரூராட்சிகளிலும், எதிர்வரும் மாதங்களில் குடிநீர் பற்றாக்குறைகள் ஏற்படும் சூழ்நிலையில், மாவட்ட நிர்வாகத்தால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்,

- கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குடிநீர் பிரச்சினை தொடர்பான அவசரகால புகார்களை தெரிவிக்க வசதியாக மாவட்ட அளவிலான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறை தொடங்கப்பட்டுள்ளது.
- குடிநீர் பிரச்சினை தொடர்பான புகார்களை கட்டுப்பாட்டு அறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள **<u>இலவச</u> கட்டணமில்லா <u>தொலைபேசி எண் 1299 (Toll free Number)</u>** இல் தொடர்புகொண்டு பொதுமக்கள் தெரிவிக்கலாம்.
- கட்டுப்பாட்டு அறை தினந்தோறும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை செயல்படும். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களை பதிவு செய்து உரிய அலுவலர்களைத் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- இதேபோல ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மற்றும் பேரூராட்சி அளவிலும் குடிநீர் பிரச்சினைகள் தொடர்பான அவசரகால புகார்களை தெரிவிக்க கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறை தொடங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டுப்பாட்டுஅறை காலை 8 மணி முதல் இரவு 8மணி வரை செயல்படும்.
- ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மற்றும் பேரூராட்சி அளவில் அந்தந்த அலுவலகத்தில் செயல்படும் கட்டுப்பாட்டு அறைகளுக்கான தொலைபேசி எண்கள் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | தொலைபேசி எண் |
|---|---|---|
| 1 | கரூர் | 04324 - 220548 |
| 2 | தாந்தோணி | 04324 - 257355 |
| 3 | அரவக்குறிச்சி | 04320 - 230028 |
| 4 | க.பரமத்தி | 04324 - 283329 |
| 5 | குளித்தலை | 04323 - 222155 |
| 6 | கிருஷ்ணராயபுரம் | 04323 - 243321 |
| 7 | கடவூர் | 04323 - 251224 |
| 8 | தோகைமலை | 04323 - 252240 |

| வ. எண் | பேரூராட்சியின் பெயர் | தொலைபேசி எண் |
|---|---|---|
| 1 | அரவக்குறிச்சி | 04320-230878 |
| 2 | கிருஷ்ணராயபுரம் | 04323-243427 |
| 3 | நங்கவரமி | 04321-2614250 |
| 4 | பழைய ஜெயங்கொண்டம் | 04323-243255 |
| 5 | மருதூர் | 04323-223777 |
| 6 | பள்ளப்பட்டி | 04320-244145 |
| 7 | புலியூர் | 04324-250550 |
| 8 | புஞ்சைதோட்டக்குறிச்சி | 04324-270850 |
| 9 | உப்பிடமங்கலம் | 04324-250501 |
| 10 | புஞ்சைபுகழூர் | 04324-270298 |
| 11 | டிஎன்பிஎல் | 04324-277278 |

| வ. எண் | நகராட்சியின் பெயர் | தொலைபேசி எண் |
|---|---|---|
| 1 | கரூர் | 04324 - 260341 |
| 2 | குளித்தலை | 04323 - 222951 |

எனவே கரூர் மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் அனைவரும் மேற்காணும் வசதியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., தெரிவிக்கிறார்.

21.1.17

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கரூர்.

பெறுநர்
செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.
(அனைத்து நாளிதழ்களிலும் செய்தி வெளியிட தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்)

21/1/17

21/01/17

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்

20.1.17